Lillestrøm
kommune

# Lillestrøm சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பழக்கப்படுத்துதல்

## பெற்றோருக்கான தகவல் கையேடு

## Lillestrøm நகர சபையில் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இடம் கிடைத்ததற்கு எமது வாழ்த்துக்கள்

சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தொடங்கும் காலம் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஓர் பரபரப்பானது

பழக்கப்படுத்தும் காலத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இருந்து நீங்கள் எதை எதிர்பார்க்கலாம். ஆனால் அதே சமயம் ஓர் சிறந்த மற்றும் பாதுகாப்பான தொடக்கத்தை அமைத்துக்கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் பெற்றோர் என்ற ரீதியில் நீங்கள் அறிந்து கொள்வது அவசியம்.

பழக்கப்படுத்தல் விடயத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையம் எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றி பெற்றோர்களுக்கு தேவையான ஆலோசனைகளுடன் தகவல்களும் இந்தக் கையேட்டில் உள்ளன.





# பழக்கப்படுத்துவதற்கான தரத்திட்டம்

நகர சபையின் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் கடைபிடிக்கக் கடமை கொண்ட அதே சமயம் தனியார் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பயன்படுத்தக் கூடிய ஓர் தரத்திட்டத்தை Lillestrøm நகர சபை கொண்டு உள்ளது. பழக்கப்படுத்துவதற்கான நடைமுறை செயற்பாட்டை ஒவ்வொரு சிறுவர் பராமரிப்பு நிலையமும் தமது நிலவரத்துக்கு ஏற்ப மாற்றி அமைக்கலாம். தொடங்கும் காலம் நெருங்கும் தருணத்தில் ஒவ்வொரு சிறுவர் பராமரிப்பு நிலையமும் தொடர்ந்தும் திட்டவட்டமான தகவல்களை பெற்றோருக்கு வழங்கும்.

பந்தப்பிணைப்பு அத்தோடு பழக்கப்படுத்தல் போன்றவற்றின் ஆராய்ச்சியை தரத்திட்டம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும் இது பாதுகாப்பின் வட்டம் (Circle of Security) மற்றும் Jåttå கட்டமைப்பு கோட்பாடு ஆகிவற்றையும் உள்ளடக்கி உள்ளது. பெற்றோர் கூட்டத்தில் இவை குறித்து மேலதிக விபரங்கள் தெரிவிக்கப்படும்.



## பழக்கப்படுத்தும் செயல்முறை விடயமாக பெற்றோருக்கு வழங்கப்படும் ஏற்பாடுகள்:

• புதிய பெற்றோருக்கு பெற்றோர் கூட்டம்.
பழக்கப்படுத்தும் செயல்முறை மற்றும் அதன் பின் உள்ள அடிப்படை கோட்பாடு.

• தொடங்குவதற்கு முந்தைய நாட்களில் வருகை தரும் ஏற்பாடு.
சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தொடங்குவதற்கு முன்னரே அவ் இடத்தை மற்றும் ஊழியர்களை அறிமுகப்படுத்திக் கொள்வதற்காக பிள்ளைகள் மற்றும் பெற்றோர்கள் அங்கு வருகை தரலாம்

• பழக்கப்படுத்துவது பற்றி போதனா பொறுப்பதிகாரியுடன் உரையாடல்
பழக்கப்படுத்துவதை இயன்ற அளவில் எளிதாக்கிக்கொள்வதற்காக பிள்ளையைப்பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் தகவல்களை சிறுவர் பராமரிப்பு நிலையம் பெறுவதை நோக்கமாகக் கொண்டு தொடங்குவதற்கு முன்னரான உரையாடல்

• தொடங்குவது பற்றி போதனா பொறுப்பதிகாரியுடன் உரையாடல்
ஆரம்பித்ததில் இருந்து 2 - 6 வாரங்களுக்குப் பின்னர், பழக்கப்படுத்தல் செயல்பாட்டின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதையும், அத்தோடு மேற்கொண்டு ஒத்துழைப்பை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட ஓர் உரையாடல்



## சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் நல்ல ஓர் ஆரம்பத்தை உருவாக்குவதற்கு பெற்றோருக்கான சிறிய அறிவுரைகள்

சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தொடங்கும் காலகட்டத்தில் பிள்ளைக்கு பாதுகாப்பான அத்தோடு ஓர் நல்ல ஆரம்பத்தை பிள்ளையின் சிறுவர் பராமரிப்பு நிலைய நேரங்களுக்கு வழங்குவதில் பெற்றோர்கள் ஓர் மிக முக்கியமான பங்கை கொண்டு உள்ளார்கள்.

பெற்றோரின் பிரதிபலிப்புகள் மற்றும் உடல் மொழியை அவதானிப்பதன் மூலம் சிறுபிள்ளைகள் இவ்வுலகத்தில் தமது பாதையை தாமே வகுத்துக்கொள்கிறார்கள். சிறுவர் பராமரிப்பு நிலையம் பிள்ளைகள் விளையாடவும் ஆராய்வதற்கும் மற்றும் ஏனைய பெரியவர்கள் உடன் சேர்ந்து இருப்பதற்குமான ஓர் பாதுகாப்பான இடம் என்பதை பெற்றோர்கள் பிள்ளைக்கு தெரியப்படுத்துவதற்கு உதவுவது முக்கியம்.



# பெற்றோருக்கு சிறு ஆலோசனைகள்

- சிறுவர் பராமரிப்பு நிலையம் மூடப்பட்டு உள்ள நேரங்களில் அதற்கு வெளியே சென்று அவ்விடங்களை அறிமுகப்படுத்தவும்.
- சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் பிள்ளை தொடங்குவதற்கு முன்னரே பிள்ளை தனது உணவுப் பொதி, குடிநீர் போத்தல் மற்றும் பையை அறிந்துகொள்ளட்டும்.
- பிள்ளைக்கு பழக்கமான அத்தோடு பாதுகாப்பை உணர்த்தக்கூடிய ஆறுதல் வழங்கக்கூடிய ஒரு துணித்துண்டு, சூப்பி, பொம்மை போன்ற ஏதாவது ஒரு பொருளை மாற்றம் கொண்ட இந்த காலட்டத்தில் எடுத்து வருவது விரும்பத்தக்கது.
- வருகைக்கென முன்குறிக்கப்பட்ட நாட்களில் கலந்துகொள்ளுங்கள்.
- புதிய பெற்றோருக்கான பெற்றோர் கூட்டத்தில் கலந்து கொள்ளுங்கள்



- சிறுவர் பராமரிப்பு நிலையம் தொடங்கும் போது பழக்கப்படுத்துவதற்கு என குறைந்தது ஐந்து நாட்களை ஒதுக்குங்கள்.
- மொழிபெயர்ப்பாளர் அவசியம் எனில் இதை சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு தெரிவிக்கவும்.
- பழக்கப்படுத்தும் நாட்களில் பெற்றோர்களில் ஒருவர் மட்டுமே ஒரு தருணத்தில் பிள்ளையுடன் வரலாம்.
- பிள்ளை சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு வருவதற்கு முன் அன்று ஓர் அமைதியான ஆரம்பத்தை பிள்ளைக்கு வழங்க முயற்சிக்கவும்.
- பழக்கப்படுத்தும் காலத்தில் வீட்டில் மாலைப் பொழுதுகள் அமைதியாக அமையும் வகையில் திட்டமிடுங்கள்.
- தேவைகள் ஏற்படும் போது சிறுவர் பராமரிப்பு நிலையத்துடன்தொடர்பு கொள்வதற்கு தயங்க வேண்டாம்.



Tamil

Grafisk printsenter rådhuset 06.2024